மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

The Honor of protecting the Mother Tongue and Veerukaviyarasanar

Dr. T. Nellaiyappan

Associate Professor, Department of Tamil, Annamalai University, Annamalainagar, India

Manuscript ID : **MT1A0002**
Volume : **1**
Issue : **1**
Month : **September**
YEAR : **2021**
Received: 17.08.2021
Revised: 25.08.2021
Accepted: 30.08.2021
Published: 03.09.2021
Pages : 11-26

ABSTRACT:

The great poet Mudiyarasanar (17.10.1920 - 3.12.1998), popularly known as Veerukaviyarasar, has been living with us in Tamil for over a century. All his works, like Bavender Bharathidasana, deal with mother tongue, Tamil language, Tamil language, culture, civilization and art. The Crown Prince was one of those who argued that learning in another language was not as special as learning in one's mother tongue. This article reveals the norms for the protection of their mother tongue, the Tamil language.

KEYWORDS:

Uyarmoli, Mother Tongue, Tamil Scholars, Tamil Music, Greatness, Spoken Language.

REFERENCES :

1. Pari Mudiyarasan (ed.), Mutiyarasan Kavithaigal, Manivasakkar Publishing House, Chennai, First Edition, 2016.
2. Prof.Shalini Elanthiraiyan, Tamizh Semmozhi Avanam, Manivasakkar Edition, Chennai, First Edition- 2005, p.11.
3. Kaviyarasar Mudiyarasan Kavithaigal, Thaimozhi Kappom.
4. Kalainjar M.Karunanidhi Semmozhi Varalattril Sila Seppadugal, Semmozhi Thamizhaiyvu Mathiya Niruvanam, Chennai, 2010.

தாய்மொழி காக்கும் மாண்பும் வீறுகவியரசனாரும்

முனைவர் தி.நெல்லையப்பன்,
இணைப்பேராசிரியர்,
தமிழியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

வீறுகவியரசர் எனப் போற்றப்பெற்ற மாபெரும் கவிஞர் முடியரசனார் (17.10.1920 - 3.12.1998) நூறாண்டுகளைக் கடந்தும் நம்மோடு தமிழால் வாழ்ந்து வருகின்றார். அவர்தம் படைப்புகள் யாவும் பாவேந்தர் பாரதிதாசனாரைப் போல தாய்மொழி, தமிழ்மொழி, தமிழினம், பண்பாடு, நாகரிகம், கலை, ஆகியவற்றை எடுத்துரைப்பன. ஒருவன் அவன் தாய் மொழியில் கல்வியைக் கற்றுக்கொள்வது போல் பிறமொழி யில் கற்றுக்கொள்வது சிறப்புடையதாக அமையாது என்று கருத்துரைத்தவர்களில் முடியரசனாரும் ஒருவர். அவர்தம் தாய்மொழி யாம் தமிழ்மொழி காக்கும் நெறிகளை இக்கட்டுரையாக்கம் வெளிப்படுத்துகிறது.

கருச்சொற்கள்

உயர்மொழி, தாய்மொழி, தமிழ்சான்றோர்கள், தமிழிசை, மொழிப்பெருமை, பிறந்தநிலம், பேசு மொழி.

முன்னுரை

தாய்மொழி காக்கும் தீரர்கள் அன்னை மொழியாம் தமிழ் மொழி காத்து வேலியிட்டு பாதுகாத்துத் தந்துள்ளனர். தந்தை பெரியார், பாவேந்தர் பாரதிதாசன், தேவநேயப் பாவாணர் மறைமலை அடிகள், திரு.வி.கலியாணசுந்தரனார் போன்றோர் எண்ணத்தக்கவர்கள். ஒரு நாட்டு வளர்ச்சியில் தாய்மொழியின் பங்கு என்பது அந்த நாட்டுப் பண்பாட்டையும் கலைத்திறனையும் எடுத்துரைப்பதோடு மொழி வளத்தையும் சீர்தூக்கிப் பார்க்க வைப்பதாகும். எந்த ஒரு படைப்பையும் தாய்மொழியால் அறிந்துணரும்போது முழு நிறைவைப் பெறமுடியும். சாதித்தல் என்பது மொழியால் அதுவும் தாய்மொழியால் அமையும்போது மகிழ்ச்சியும் மனநிறைவும் ஏற்படும்.

ஒரு மொழியை உணர்வுப்பூர்வமாக முதலில் ஊட்டுபவள் தாய்தான். அதனால்தான் மொழியின் முதல்வள் தாயாகின்றாள். படிப்படியே மழலைகள் கற்றுத் தெளிவடையும்

நிலையிலும் பள்ளிக் கல்வியிலும் உயர் கல்வியிலும் ஆய்வு நிறைக் கல்வியிலும் உயர்த்தும் நெறி தமிழ் மொழியால் மட்டுமே இயலும். ஒருவர் எத்தனை மொழி அறிந்திருந்தாலும் ஆற்றலும் ஆய்வும் மேற்கொண்டாலும் தாய்மொழியின் வளர்ச்சி இல்லாமல் யாதொன்றையும் சாதிக்க முடியாது என்பதை உணர்தல் வேண்டும். உலக முதன்மொழியாக விளங்கும் தமிழ் மொழி எல்லா வளங்களையும் தன்னகத்தே கொண்டது. இலக்கிய வளங்களும் இலக்கணக் கோட்பாடுகளும் நிறைந்த மொழி. புதுமைகள் யாவற்றையும் வடிவாக்கித்தரும் மொழியாகவும் அறிவியல் மொழியாகவும் ஆக்கம் பெற்று வருகிறது.

எத்தகைய சவால்களையும் மிக எளிதாக எடுத்தாளும் திறம் பெற்ற மொழியும் தமிழ் மொழியாம் தாய் மொழிக்கு உண்டு என்பதை எண்ணியே பிற மொழியாளரும் தமிழ்க்காதல் கொள்கின்றனர். முடியரசன் தமிழ் வணக்கத்தில் முத்தமிழாக உள்ள பெருமையை எடுத்துரைத்துள்ளார். மொழியால் பகை, தடை, துயரம் வந்திட்டால் அவற்றை அழிக்கும் வல்லமையைத் தமிழ் தரவேண்டும் என முழங்கியுள்ளார். எத்தகைய சூழலிலும் வீழாமல் தொடர்ந்து வரும் ஒரே மொழி தமிழ்மொழிதான் என்றும் நெருப்பு, புனல், கரையான் அழித்தவை போக எஞ்சியுள்ள தமிழ் நூல்களின் எண்ணிக்கையே இலக்கிய வகைகளின் எண்ணிக்கையே தமிழை உணரவைக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.[1]

தாய்மொழியின் தன்மை

தமிழ் என்றால் முத்தமிழான இயல், இசை, நாடகம் கலந்ததே என்பது நெறி. அதனால்தான் எம்மொழிக்கும் இல்லாத சிறப்பைத் தமிழ்மொழி பெற்றுள்ளது. தமிழ்மொழி எப்போது தோன்றியது என்பதைக் காலத்தால் அறியமுடியாது. தொன்மை மிக்கது. உலகத் தோற்றம் குறிஞ்சியில் தோன்றிது. அங்குதான் ஆதிமனிதன் தோன்றினான் என்றும் சைகைமொழி மூலம் மற்ற மனிதர்களைத் தொடர்புகொண்டான் என்றும் குறிப்பிட்டுள்ளார். மகிழ்ந்த மனிதன் குதிக்கத் தொடங்கினான். குயிலின் கூவும் ஒலியைக் கேட்டுத் தானும் கூவிப்பார்த்தான். இதுதான் மனிதன் பேசத் தொடங்கிய நிகழ்வு என்றும் பழகுமொழி மெதுவாக இலக்கியமொழியாம் தன்மைபெற்றது. தமிழ் மொழியாகி உலகில் உயர்மொழியாய் முதல் மொழியாய் வலம் வந்தது எனவும் குறிப்பிட்டுள்ள முடியரசன் மூன்று தமிழ் தோன்றியது என்று கவியரங்கேற்றினர்.[2]

தமிழ் மொழியின் பெருமையை உரைத்த பரிதிமாற் கலைஞர், "தான் வழங்கும் நாட்டின்கண் உள்ள பல மொழிகட்குத் தலைமைமையும், அவற்றிலும் மிக்க மேதவுடைமையுள்ள மொழியே உயர்மொழி" [3]

தமிழ் மொழி காப்போம்

எண்ணும் எழுத்தும் உடையவன் தமிழ் அன்னை என்றும் இளமையுடனும் எழிற்தோற்றத்துடனும் இருப்பவள். ஆனால் எல்லா வகையிலும் முழுதுடைய தோற்றத்துடன் இருந்த தமிழ் இன்று எண் வடிவத்தில் மாற்றான் எழுத்துடன் கலந்து எழுதும் அவலநிலை ஏற்பட்டு வருகிறது. இவ்வாறே சென்றால் எஞ்சியுள்ள எழுத்துக்களிலும் மாற்றம் வந்து கலந்தாலும் கேள்வி கேட்க இயலாத நிலையே உள்ளது. வேற்றுநாட்டு வரிவடிவம் நமக்குத் தேவையில்லை. இந்திய நாட்டிற்கு என்று உரிமை கொண்ட மொழிகளில் எத்தகைய மாற்றத்தையும் செய்தல் கூடாது. தமிழ்நாட்டில் கலைக்கூடம், ஆட்சிமன்றம் யாவற்றிலும் தமிழ் மொழியே வேண்டும். எந்தத் துறையிலும் தமிழ்தான் ஆளவேண்டும். நாற்காலியைத் தக்க வைக்கவே சிலர் வெற்று முழக்கமிடுகின்றனர். அந்நிலை நீங்க வேண்டும்.

எப்படியோ அரசிருக்கை கிடைத்துவிட்டது என்று சிலர் பேசுவர். பின்னர் பழி வந்தாலும் இறங்கி வந்திட மாட்டார்கள். அப்படியே அருள்வந்து ஒரு நாள் குதித்தெழுவர். மீண்டும் நாற்காலி முன்னே வர அதை மறைத்து இருந்து விடுவார். இப்படியான நிலையில் உள்ள ஆட்சியாளர்களால் எவ்வாறு தமிழ்காக்க முடியும். காலந்தான் இவர்களுக்குப் பதில் உரைக்க வேண்டும்.

காலந்தான் இவர்களைத் திருத்த வேண்டும். அதனால் தேர்தலில் அறிவு புகட்ட வேண்டும். அப்போதுதான் தமிழர், தமிழ் என்ற உணர்வு அடைவர். உலகில் இவர்களின் உரிமைச் சொத்தா? எதை வேண்டுமானாலும் சிதைக்க என்ன உரிமை உள்ளது என்றும் கேள்வி கேட்டுள்ளார். நாற்காலி கனவுகளுக்காக மொழியை அழிக்க எண்ணுவோர் அழிய வேண்டும். அவர்களைக் காலந்தான் திருத்த வேண்டும். தமிழ் உணர்வு என்பது உலகத்துக்கு எடுத்துரைக்க வேண்டும். மேலும் அவர் குறிப்படும்போது,

"பிறந்தநிலம் ஒன்றுண்டு வணங்கல் வேண்டும்

பேசுமொழி ஒன்றுண்டு போற்றல் வேண்டும்

சிறந்த பொருள் இவற்றின்மேல் ஒன்றும் இல்லை

சிந்தித்தே இவைகாக்க முனைவோர் வாரீர்

கரந்துவரும் பகையுண்டு நினைவிற் கொள்க

காலமெலாம் அடிமைசெய லிழத்தல் வேண்டா

இறந்த பின்னும் தலைமுறைகள் நம்மை வாழ்த்த

ஏற்ற செயல் ஈதொன்றே காப்போம் வாரீர்"[4]

தாய்மொழி காக்க வேண்டுமானால் நமக்கென, ஒதுங்கிக்கொள்ளும் மனநிலை நீங்க வேண்டும். ஒரே அணியில் கூடி மொழிகாக்க முனைய வேண்டும் என்பதற்காகவே 'கனன்றெழுக' என்று தலைப்பிட்டு உரமூட்டியுள்ளார் முடியரசன்.

"நமக்குரிய தாய்மொழிக்கு வந்துவிட்ட

நலிவகற்ற ஒருமுகமாய் எழுக! மற்றோர்

தமக்குரிய மொழிக்கெல்லாம் வரவு கூறித்

தலைவணங்கும் அருளினிமேற் போதும் போதும்

தொடர்ந்து வரும் தன்மானம் நிமிர வேண்டும்

நமக்கென்ன என்றிருக்கும் பொறாமை நீங்கி

நமக்குத்தான் பொறுப்பென நாம் எழுதல் வேண்டும்"[5]

மொழிக்காக உயிர் கொடுப்போம்

இந்தி மொழி பொது மொழியாய்த் தகுதி பெற்றது என்ற நிலையைக் கண்டு கொதித்தெழுந்தவர் முடியரசன். குயில்கள் கூவும் மலர்ச்சோலை போன்ற தமிழ்நாட்டில் கோட்டானுக்கு இங்கே என்ன வேலை என்று கேட்கின்றனர். இந்தி மொழி எந்த வடிவில் தமிழகத்தில் வந்தாலும் அதை சாதிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தவர் மூதறிஞர் இராசாசியின் கருத்துகளை அறிஞர் அண்ணா மறுத்துரைத்து எதிர்க்கின்றார். அதனால் தமிழகத்தில் அறப்போர்கள் பல நடந்தன. அவற்றுள் பலர் உயிர் இழந்தனர். அப்படி இருந்தும் இந்த மொழித் திணிப்பு தொடரச் செய்கிறது என்று வேதனையுடன் பதிவிட்டுள்ளார். மாநில உரிமைகளை மதிக்கும் பண்பு வேண்டும். ஒவ்வொரு மாநிலத்தின் பண்பாடு, நாகரிகம் மொழி என்பன சிதையாமல் புத்துணர்வுடன் வாழ்வதுதான் குடியுரிமை என்பதை தமிழ் உணர்வுடன் போற்ற வேண்டும்.

"உறவுக்குக் கைகொடுப்போம் எனினும் எங்கள்

உரிமைக்கும் குரல்கொடுப்போம்; தென்புலத்தின்

மறுதிக்கில் வாழ்வோர்கள் குரலைக்கேட்க

மறுத்துவிடின் உயிர்கொடுப்போம்; சிறையில் மாண்ட

திறமிக்க நடராசன் தால முத்து

தென்னாட்டில் பலருள்ளார், இன்று வாழ்வோர்

உரிமைக்கே உயிர்கொடுப்போம் என்பர் நாளை

உணர்வுடையார் என் சொல்வார்? யாரோ கண்டார்"[6]

மேலும்,

இணையில்லாத செல்வவளம் பொருந்திய தமிழ்நாட்டில் இந்தி மொழியைப் புக விட மாட்டோம் என்றும் குரல் எழுப்புங்கள். சிங்கம் வாழும் பூமியில் நரிக்கென்ன வேலை என்பதையும் கூறியுள்ளார். பல இலக்கியத் தொகுப்புகள் கொண்ட தமிழ் மொழிக் கூட்டத்தில் அயல்மொழிக்கென்ன புகுதல் நெறி என்று வன்மையாக கண்டித்துள்ளார். வடவர்க்கு ஒரு செய்தியையும் உடன்வைத்து மொழிந்துள்ளார். மொழி இனம் என்றால் தமிழ் இனம்தான் என்பதை உலகுக்கு உணர்த்தியவர்கள் தமிழர்கள்தான் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். வீரம் விளைந்த பூமி தமிழ்பூமி என்பதையும் உணர்வீர்களானால் எம்மொழியையும் இங்கு வந்து திணிக்க மாட்டார் என்பதையும் குறிப்பிட்டுள்ளமை எண்ணத்தக்கது.

இந்தி மொழியை மூன்றாம் நாள் முளைத்த மொழி என்று புலப்படுத்தியுள்ளார். எங்கள் தமிழ் மொழியை ஈன்றவளும் பெண்தானே அவளைக் காப்பது எங்கள் கடமை என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ் மொழியைக் காக்க இன்னுயிரையும் தர முன்வருவர் என்றும் புலப்படுத்தும் பாடல் வாகை கொள்வோம் என்பதாகும்.

"வீடென்ன மனையென்ன மக்களென்ன

வீணுக்கு வாழ்வென்ன பதவி என்ன

நாடென்ன மொழியன்ன நலியும்போது!

நாமென்ன மரமென்று நினைத்தார் போலும்?

ஓடென்ன மெலிந்தென்ன நரம்பி லெல்லாம்;

ஓடுவது புண்ணீரா? செந்நீர் வெள்ளம்

ஈடென்ன கண்டதுண்டு தமிழ் மொழிக்கே?

ஈந்திடுவோம் நம்முயிரை; வாகை கொள்வோம்"[7]

இவ்வாறு இனிவிடமாட்டோம், மாவீரர் பல உண்டு. தமிழோடிணைந்தாய், சொல்லடி சொல்லடி இந்திப்பெண்ணே, பிரிந்துபோ, சட்டம் செய்க, விடை கொடு தாயே,

முழங்கட்டும் போர்ப்பறை, வாளேந்தி வா மகனே போன்ற கவிதைகளிலும் இந்தித் திணிப்பை எதிர்த்து குரலெழுப்பியுள்ளார்.

மொழிப்பெருமை

மணம் பரப்பும் பூங்காவுள் கள்ளிக்கூட்டம் என்று அயல்மொழியைச் சாடுகிறார். நெல்வயலுக்குள் உதவாத களான் போல் அயல்மொழிகள் உள்ளன. தொன்னூல்கள் பல தமிழில் உள்ளன. கறையான் போல் சில நூல்கள் வந்து கலப்பதை எதிர்த்துள்ளார். வடவரிடத்தில் தமிழ்மொழி எந்த நிலையிலும் சளைத்ததில்லை என்பதையும் எச்சரிக்கைக் குரலாக எடுத்துரைத்துள்ளார். அறப்போரை அறிஞர் அண்ணா துவக்கிவிட்டார். அதனால் தமிழன் சாவுக்கும் அஞ்சமாட்டான் என்று கவி பாடியுள்ளார்.

மொழியன்னை நலிந்தால் விடமாட்டோம். வீடு, மனை, மக்கள் மறந்து தமிழ்நாட்டிற்காக எவ்விதமான பணியாக இருந்தாலும் அவற்றை ஒரு பொருட்டாக மதிக்க மாட்டோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதனால் தமிழனுக்கு உயிர் ஒரு பெரிதான செயல் அன்று என்பதையும் உணர வைத்துள்ளார். அதனால் பாடியதே “வாகை கொள்வோம்” என்ற கவிதையாகும்.

இனி விடமாட்டோம் என்ற கவிதையில் உலக முதன்மொழியான தமிழுக்கு இழுக்கு வந்தால் சும்மா இருக்க மாட்டோம் என்று எச்சரித்துள்ளார். மூன்று முறை இந்தி மொழியைத் தமிழகத்தில் திணிக்க முயன்று தோல்வியுற்றனர். வடவர்கள் என்னும் குறிப்பையும் தந்துள்ளார். இந்தி வன்முறையால் தமிழகத்தில் தலைகாட்டியபோது அறப்போரில் பலர் மாண்டனர். பலர் சிறைக்குச் சென்றனர். ஆனாலும் தம் கொள்கையில் சிறிதும் மாறாத எண்ணம் கொண்டவர்களாகவே தமிழர்கள் இருந்தனர். தமிழின் மொழிவடிவம் அறியத்தக்கது. இதனை,

"தொன்று தொட்ட தமிழ் மொழியில் எழுத்துக்கெல்லாம்
தூயவரி வடிவுண்டு தெளிவும் உண்டு
கொன்றுவிட்டுத் தமிழெழுத்தை அவர்தம் தேவ
நாகரியாம் குறுக்கெழுத்தைக் கொணர்வ தற்கே
நின்றுவிட்டார் வடபுலத்தார் ஒருமைப்பாட்டை
நிலைநிறுத்தும் நோக்கமென உளறு கின்றார்
நன்றுகெட்ட அவர் நினைவை மாய்ப்ப தற்கு
நாமிங்கு மனத்துணிவு பூண்டு விட்டோம்"[8]

இந்தி எதிர்ப்பின்போது உயிர்நீத்த தமிழர்கள் பலர் இருந்தனர். இந்தி எதிர்ப்பை வெளிக்காட்டும்போது நஞ்சுண்டு மாண்ட விறாலிமலை சண்முகன் பற்றி குறிப்பிடுகிறார். அவரின் வீரம் மொழிக்கானது என்பதையும் அவரின் மானம் வரவேற்கத்தக்கது என்றும் பதிவுசெய்துள்ளார். அவ்வாறே தன்மீது எரியூட்டிக்கொண்ட சின்னசாமி, தாலமுத்து நடராசன் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் இராசேந்திரன் உள்ளிட்டேர் உயிர்த்தியாகம் செய்த வரலாறுகள் தமிழ் மொழியின் அடையாளங்களாகும்.

உலகை வென்ற தமிழ்மொழி

காலத்தைக் கடந்து கற்போர் நெஞ்சையும் கவர்ந்த மொழி தமிழ் மொழி. இது தரை கடந்து, கடல் கடந்து உலகத்தை வென்ற மொழி. நாவன்மை படைத்த இலக்கண நெறியின் தொடர்பும் இலக்கிய வரவின் தொடர்பும் குறையாத மொழி. எதற்கும் மூலமான மொழி அன்புமொழி, மும்மை மொழியே தமிழ் மொழியாகும். பெருமைகள் பெற்ற மொழி. பேராற்றல் பெற்ற மொழி. எந்த மொழி தமிழ் மொழிக்கு ஊறு செய்ய வந்தாலும் அம்மொழியை எதிர்த்து வெல்லும்.

பேசும் கலையாவும் பேணுதற்கு நல்மொழி தமிழ்மொழி. நாடாளும் நல்லோர் தமிழை வளர்க்க வேண்டும். தாய்மொழிக்கு எத்தகைய தடைவந்தாலும் அதை எதிர்த்து குரல் எழுப்பும் மனிதனே முதுகெலும்புள்ள தமிழன் என்பதை உணரவேண்டும். ஆண்டாண்டு காலம் அழியாமல் இருக்கும் மொழி தமிழ்மொழி என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கு அரணாக முத்தமிழறிஞர் கலைஞர் தரும் கருத்து ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது" உலகச் செம்மொழிகளின் வரிசையில் தமிழுக்கு ஈடில்லாத ஒரு தனித்தன்மையுண்டு. ஈராயிரம் ஆண்டுப் பழமைவாய்ந்த செவ்விய இலக்கியங்களின் களஞ்சியமாகவும் மூத்த திராவிட இலக்கிய அணிகலன்களின் கவசமாகவும் தமிழ்மொழி திகழ்கிறது. எண்ணற்ற கவிதைகள், செய்யுள்கள், பாடல்களின் கோவைகளைக் கொண்ட இம்மொழி கிறித்துவின் முதலாண்டுக்கு முன்னேயே நிலைபெற்றதாகும். தங்கு தடையின்றிப் பொங்கும் வளமையுடனும் பொலிவார்ந்து ஓங்கிய வளர்ச்சியுடனும் நூற்றாண்டுகள் பல கடந்தாலும் இன்றும் தன் சீரிளனத் திறம் குன்றாமல் தமிழ்மொழி சிறந்து விளங்குகிறது"[9] என்பதால் தமிழ் மொழியின் நீண்ட நெடிய வரலாறு உணர்த்தப்பட்டுள்ளது. அத்தகைய மொழியை வளம் குன்றாமல் காப்பது நமது கடமையாகும்.

தேசிய மொழிகள்

குடியாட்சியில் தேசிய மொழிகளாக அமைந்த பதினான்கு மொழிகளுக்கும் சம உரிமை என்பதைத் தந்தால்தான் ஒவ்வொரு மொழியும் வளரமுடியும். இதை மறந்து நடுவண் அரசு செயல்படுவதை எப்படி பொறுத்துக் கொள்ள முடியும். உன் மொழி உயர்ந்தது என்றால் என் மெழியும் உலகில் உயர்ந்தது என்பதை உணரவேண்டும். இந்தி மொழிக்கு எந்த அளவிற்கு உரிமை உண்டோ அந்த அளவு உரிமை தமிழுக்கும் உண்டு. உலகில் உறவுடன் பிறந்த மொழிகள் நாம். அப்படியிருக்க உன்தாள் பணிய வேண்டுவது வேதனையாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஏழு மாநிலங்கள் அவர் காலத்தில் இந்தி ஆண்டது. பதினேழு மாநிலங்களின் மொழி தாழவோ எண்ணம் கொள்வது எனவும் வீறு கொண்டு எழுந்தார். போராட்ட நிலை நீங்க வேண்டும் என்றும் தீர்வு கண்ட கவிஞர்.

“எம்மொழியும் சமமாக இனியதொரு

வழிசெய்க இணைந்து வாழ்வோம்

நும்மொழிதான் கோலோச்ச நுழைப்பீரேல்

தனிநாடு நொடியில் தோன்றும்

நன்மையெனிற் கைகொடுப்போம் நலிவுதரிற்

போர்தொடுப்போம் நயச்சொல் பேசும்

எம்மொழியும் இனிவேண்டா எழுதுங்கள்

சட்டத்தில் இதுதான் நேர்மை”[10]

என்று பாடியுள்ளதால் மொழிகளுக்கு இடையே ஏற்றத்தாழ்வோ திணிக்கும் நெறியோ கூடாது என்று தனது எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளார். அப்படி ஏற்றத்தாழ்வு மேலோங்கினால் குடியாட்சி தர்மத்திற்கு அது உதவாது.

தமிழ்மொழி காக்க முழங்கட்டும் போர்பறை என்று முழக்கியவர். பொருநர்பறை முழங்கட்டும் என்று சூளுரை உரைத்துள்ளார். காட்டுப்புலியினமாகத் தமிழர்களின் மறவர் படை எழுந்து எழுச்சிகொண்டு வீறு கொள்ளும் என்றும் குறிப்பிட்டுள்ளமை தமிழ் மொழிகாக்கும் காவலராக முடியரசன் விளங்குவதைக் காட்டுவதாகும்.

எந்த மதமாக இருந்தாலும் எந்த கட்சியாக இருந்தாலும் எமது தமிழ் என்ற உணர்வோடு தமிழ்மொழி காக்க வாளேந்தி வரவேண்டும். தமிழ் மகனே என்றும் விளித்துப் பாடியுள்ளார். தமிழ் மொழியை இகழ்ந்தாலோ அல்லது இடர் செய்ய நினைத்தாலோ அவர்களிடம் போர் செய்ய வேண்டும். தமிழை மீட்டுருவாக்கம் செய்ய

வேண்டும் என்றும் போர்ப்பரணி பாடியுள்ளார். யாருக்கும் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. பாருக்குள் நீதான் வயதால் மூத்தவன் என்ற பெருமையோடு செயல்படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளமை அவர்தம் வரலாற்றுணர்வை வெளிப்படுத்துகிறது.

தமிழ் பண்பட்ட மொழி, பழுதில்லாத மொழி. அதனால் மொழிகாக்க ஒரு நோக்கம் கொண்டு செயல்படுவாய் என்றும் குறிப்பிட்டுள்ளார். வேறு எந்த நோக்கத்திலும் அணுகாமல் மொழி காக்க வேண்டும் என்ற உணர்வோடு வாகை சூடுவாய் என்றும் குறிப்பிட்டுள்ளார். வேறு எந்த நோக்கத்திலும் அணுகாமல் மொழிகாக்க வேண்டும் என்ற உணர்வோடு வாகை சூடுவாய் என்றும் இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கின்றார் கவிஞர் முடியரசன்.

தமிழா! தோழா நீ ஒன்றும் விளையாட்டுப் பிள்ளை இல்லை. விளங்காத பிள்ளையும் இல்லை. வந்த மொழிக்கு உயர்வு இருக்கின்றது. இங்கே இருத்துவரும் தமழ் மொழிக்கு உயர்வு இல்லை என்னும் நிலை உள்ளதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்கின்றார்.

இளைஞர் படையே எழுக

உறவுக்குக் கை கொடுப்போம். உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற நிலை பலகாலும் சொல்லிச்சொல்லியே எதுவும் இல்லாமல் போனதுதான் உண்மை. தமிழன் கண்ட கனவு மறுதலிக்கப்படுவதுதான் வழக்க நடைமுறையாய் இருந்து வருகிறது. இதையெல்லாம் நீக்க இளைஞர் படையே எழுந்து வரவேண்டும். இதனை அந்த நாள் வந்தே தீரும் என்ற கவிதையில் வெளிப்படுத்தும் முடியரசன்,

“பொறுக்கும்வரை பொருத்திருந்தோம் பொறுத்த நம்மைப்
புழுவென்று கருதுகின்றார்; குனிந்து கொண்டே
இருக்கும்வரை ஏறுபவர் ஏறிப் பார்ப்பர்
இளைஞர்படை நிமிர்ந்தெழுந்து வீறுகொண்டால்
தருக்குடையாத தலையுருளும் உடல்கள் சாயும்
தன்மானம் போர்முரசம் முழங்கும் என்று
வெறுப்படைந்தோர் எழுச்சி கொளா முன்னர் இங்கே
விடுதலையைத் தமிழ்நாட்டிற் பரவச் செய்வீர்”[11]

கன்னட மாநில நிகழ்வு

முடியரசனார் கன்னட மொழி பேசும் மாநிலத்திற்கு இன்ப உலா சென்றிருந்தார். அப்போது கன்னடப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டு வீதியில் மிகப்பெரிய இசை விருந்து நடைபெற்றது. ஒருவர் புரியாத மொழியில் பாடிக்கொண்டிருந்தார். எங்களுக்கோ ஒன்றும் புரியவில்லை. சிறிது நேரத்தில் பாரதியின் பாடலைத் தமிழில் பாடினார். அவ்வளவுதான் அங்கிருந்த கன்னட மொழி பேசும் மக்கள் ஒன்று திரண்டு தமிழிசைப் பாடியவரையும் இசையரங்கையும் அடித்து நொறுக்கினர். ஏன் என்றதற்குத் “தமிழில் பாடிவிட்டான்” என்றதும் அங்கே இருந்த எங்களுக்கும் முகம் உடைபட்டது. தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடிவந்து சேர்ந்தோம் என்று குறிப்பிடுகையில் அவர்களின் தாய்மொழிப்பற்று நமக்கு இங்கு வேண்டும் என்று உரைக்கின்றார்.

உறங்கும் தமிழ் மகனாக உள்ளனர் என்று நொந்துகொள்ளும் கவிஞர், தன்னினம், தன்மொழி, தாழ்வு கண்டு வெகுண்டெழாமல் நமக்கென்ன என்றும் சும்மாவே இருந்து விடுகின்றனர். மேலும் ஆழ்ந்த உறக்கத்தில் தமிழன் அடங்கி விடுகின்றான் என்றும் துன்பப்படுகின்றார்.

தமிழ்நாட்டின் சிறப்பை ஒருவர் புகழ்வதென்றால் தனிப்பிறவிதான் எடுத்து புகழ முடியும். அவ்வளவு புகழ் நிரம்பிய நாடு நம்நாடு. இலக்கியப் பெருமையில் திருக்குறளின் பெருமையை நளெல்லாம் பேசலாம். திருக்குறளின் பெருமை அயல்நாட்டினர் பேசும் அளவிற்கு நம் நாட்டு மக்கள் பேசவில்லை. நல்ல உள்ளம் படைத்தோர் தமிழ் மொழிக்கு நன்மை செய்து வாழவேண்டும். எங்கெங்கு காணினும் தமிழ்தான் என்ற இயல்புநிலை மாறவேண்டும். தமிழர் போக்கு ஆங்கிலச் சொற்களுக்கு அழகிய தமிழ் மொழிபெயர்ப்புத் தரவேண்டும் அதை எதிர்ப்போரைத் திருந்த வழி காட்ட வேண்டும். இவ்வாறு அமைந்தால்தான் தமிழ்மொழி வளம் பெறும்.

தமிழ் மொழி தவிர்த்து ஏனைய மொழியைப் பெருமையாகப் பேசுவது இழுக்காகும் என்றும் இசையரங்கில் ஒன்று இரண்டு பாடல்கள் நிறைவுப் பாடல்களாக ஒலிக்கும் நிலை மாறவேண்டும். முடிவான மொழி தமிழ் மொழி அன்று தமிழ்மொழி என்றும் நிலையான நிகழ்கால மொழி என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். பிற சமய மாறுதல்கள் செய்துகொள்வதும், பிற மதத்தைத் தழுவிக் கொள்வதும் அவரவர் வாழ்வியல் உரிமை. யாரும் தடுக்கவில்லை. ஆனால் தமிழ்ப் பெயர்களுக்கு மாறாக ஆங்கிலப்பெயர்களும் அரபு மொழிப்பெயர்களும் தமிழர்களை அரவணைத்துக்கொள்வது தான் அதிர்ச்சியாக உள்ளது என்று கவிஞர் முடியரசன் குறிப்பிடுவது எண்ணத்தக்கது. கோவில்களிலும் தமிழ் ஒலிப்பதில் பல்வேறு தடைகள் உள்ளன என்றும் வேதனையோடு பதிவிடும் முடியரசன் கோவிலுக்குள் கொடுமை என்று சுட்டிக்காட்டிப் பாடல் புனைந்துள்ளார்.

“வடமொழி ஒன்றே ஏற்பர்

வண்டமிழ் ஏலா தென்றால்

கடவுளர் உருவக் கல்லைக்

கடலிடை வீசலன்றி

இடமுடைக் கோவிலுக்குள்

இன்னுமேன் வைத்தல் வேண்டும்!

மடமிகு மதிய ரானீர்

வந்தவர் ஏறிக் கொண்டார்”[12]

அது மட்டுமல்ல கோவிலைக் கட்ட உதவிய கொத்தனார் உள்ளிட்ட தொழிலாளர்கள், சிற்றாள், கல்லைச் செதுக்கிக் கடவுளாகத் தந்த சிற்பி யாவரும் கோயிலுக்குள் செல்லத் தடை விதிப்பர். அப்படியே வந்து அவர்கள் தொட்டுவிட்டால் தீட்டு என்று இகழ்வர். இதனை,

“கல்லினைக் கடவுளர்க்கிக்

கைத்திறன் காட்டுஞ் சிற்பி,

கல்லொடு கல்ல டுக்கிக்

கோவிலைக் கட்டுங் கொற்றன்

கல்லினை மண்ணைச் சாந்தைக்

களத்தினிற் சுமக்கும் சிற்றள்

செல்லவுந் தடையாம் செய்த

சிலைகளைத் தொட்டால் தீட்டாம்”[13]

என்பதால் வீறு கவியரசர் யதார்த்தத்தோடு மொழிந்துள்ளமை அறியத்தக்கது.

தேவாரம், திருவாசகம் போன்ற பக்திப்பனுவல்களைப் பாடிச் சிறப்பித்த மொழி தமிழ், ஆண்டாள் படிய திருப்பாவை ஏனைய ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் யாவும், தமிழ்மொழியில் அமைந்துள்ளன. இவை எவ்வாறு கோவில்களில் பாடப்படுகின்றன என்பதைப் பார்க்கச் சென்றேன். அங்கு நால்வர் பாடிய பாடல்களும், ஓதப்படவில்லை. பன்னிரு திருமுறைகளில் ஒன்றும் ஓதப்படவில்லை. அங்கு வடமொழி மந்திரம் மட்டுமே ஓதப்பட்டது. இது ஏன் என்று நொந்துபோய் வெளியே வந்தேன்.

"தேனிகர்க்கும் தமிழ்மொழியில் நெஞ்சினிக்கத்

தேவாரம் பாடியருள் மூவருள்ளும்

நல்லறிஞர் உறைவிடமாம் தொண்டை நாட்டில்

நாடறிந்த காஞ்சிதனில் வாழ்ந்த வந்த

நல்லவனைக் கணிகண்ணன் என்பான் றன்னை

நாடு கடந்தேகுகென அரசன் கூறச்

செல்லுமவன் பின்தொடர்ந்தற் புலமை மிக்க

திருமழிசை யாழ்வாரும் கார்மேகத்தை

வெல்லுகின்ற நிறத்தானும் அவர்பின் சென்றான்

வேட்டெழுந்த தமிழார்வம் அதனால் அன்றோ!"

என்று தமிழின் பெருமையை சைவ சமயம், மற்றும் வைணவ சமயம் சார்ந்த பெரியோர்களின் வாழ்வியலோடு எடுத்துரைத்து தமிழ் மொழியின் பெருமைகளைப் பேசியுள்ளார்.

ஆண்டாள் தான் சூடி இறைவனுக்கு அளித்த மாலையே சிறப்புமிக்கது என்று இறைவன் கருதினான். ஆண்டாள் இயற்றிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி இரண்டும் வைணவ சமய நூல்களாயினும் கலைத் தமிழின் பெருமையை நிலைநாட்டும். அதை இயற்றியதால் இறைவன் மனத்தில் ஆண்டாள் இருக்கவும் செய்த மொழி தமிழ் மொழி என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு சைவசமயத்திலேயும் வைணவ சமயத்திலேயும் இறைவனுக்கு ஏற்பமை மொழியாகத் தமிழ் விளங்கிய போதிலும் அவை நடைமுறையில் எந்தக் கோவிலிலும் இசைக்கப்படவில்லை என்பதுதான் உண்மை என்றும் முடியரசன் கருத்துரைத்துள்ளார்.

சமூக ஏற்றத்தாழ்வைக் கடிந்தவர்

சமூகத்தில் சாதியின் பெயரால் ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. அது இன்றுவரையில் எவராலும் தீர்க்கப்படமுடியவில்லை. நாட்டில் பிறந்தவர் அனைவரும் மனிதர்தான். ஆனாலும் வல்லரசு நாடுகளிலும் இச்சிக்கல் தீரவில்லை. கறுப்பின மக்களை வெள்ளையர்கள் அடிமைப்படுத்துவதும் அவர்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்படுவதும் தீர்ந்தபாடில்லை. இவற்றை உணர்ந்தே வீறு கவியரசர் எச்சரித்து கவி பாடியவர்.

பல்கலைக்கழகங்களில் தமிழ் வகுப்புகள் பிற துறையோடு இருந்த நிலையை மாற்றித் தனித்துறையாக வரவேண்டும் என்று முன்னெடுத்தவர்களில் முடியரசனாரும்

ஒருவர். அதனால் வந்ததே ~புலவர்| எனும் பட்டம். ஆனாலும் ஆங்கில வழி பயிலும் மாணவர்களைப் போல புலவர் பட்டம் பெற்றவர்களை மதிக்கப்படுவதில்லை என்பதையும் மனம் நொந்து வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ்ச் சான்றோர்களை மதிக்க வேண்டும்

முடியரசன் தமிழ்ச்சான்றோர்களை மதிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். புலவர்கள் இதற்கு உடன்பட்டுச் செயலாற்ற வேண்டும். அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று கோரிக்கையை நிறைவேற்ற முனையவேண்டும். தமிழ்ப்புலவர்கள் இயற்றிய பாடல்கள் யாவும் இயற்கையை இசைத்து மனநலத்தை மேன்மைப்படுத்தியுள்ளன. சங்கப் புலவர்களின் அகப்புறச் சுவை, அறமுரைக்கும் நீதிநூல்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், பக்திப் பாடல்கள், இராமலிங்க அடிகளின் திருவருட்பா, பாரதியின் பாடல்கள், பாவேந்தனின் புரட்சிப் பாடல்கள், கவிமணி, இப்படி காலந்தோறும் தமிழ்ப்புலவர்கள் அரிய பல நூல்கள் இயற்றித் தந்து உள்ளங்கவர் புலவர்களாகியுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டும் முடியரசன்,

"எத்துணைதான் இருக்கண்கள் நேர்ந்த போதும்
எதிர்த்தெழுந்து நகைத்து நின்று வெற்றி கண்ட
முத்தமிழுக்குப் புகழ்படைத்த புலவர் பல்லோர்
முன்னாளில் வாழ்ந்திருந்தார் என்றன் உள்ளம்
நந்துகின்ற புலவர்சிலர் பெயரை இன்று
நாம்நினைதல் நலம்பயக்கும் நினைந்து வாழ்த்தும்
அத்திறத்தால் தமிழ்காக்கும் எண்ணம் நெஞ்சில்
அரும்புவிடும் மலராகும் மணம் பரப்பும்"[14]

தமிழ் வளர்த்த பெரியோரில் இளங்கோவடிகள் குறித்து முடியரசன் அழகான கவி ஒன்று யாத்துள்ளமை எண்ணத்தக்கது. சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோவடிகள் அக்காப்பியத்தைக் குடிமக்கள் காப்பியமாக இயற்றியமையை நினைவு கூர்ந்துள்ளார். மூவேந்தர்களின் செய்திகளையும் உள்ளடக்கிப் படைத்துள்ளார் என்றும் அவர்கள் சேரமன்னன் கண்ணகிக்குக் கோயில் எழுப்பி முதன்மை பெற்றுள்ளான் என்றும் குறிப்பிட்டுள்ளார். அச்செயல் பெண்ணினத்தைப் பெருமைப்படுத்துவதாகும். சிலம்பின் சிறப்பு ஒரு பண்பாட்டுப் பதிவாய் மாறிய நிகழ்வையும் எடுத்துரைத்துள்ளார்.

இத்தகு புகழ்மைக்குக் காரணம் தமிழ்ப் புலவன் இளங்கோவடிகளே என்றும் அவர் புகழ் ஓங்கவேண்டும் என்றும் குறித்துள்ளார்.

புரட்சிப் பாவலனான பாவேந்தரின் கொள்கைகளை எங்கெங்கு வெளிப்படுத்தவியலுமோ அங்கெல்லாம் வெளிப்படுத்திய தீரர் முடியரசனார். யாப்பெனும் அணையைத் தேக்கி வைத்த புலவன் என்று புகழ்ந்துரைத்துள்ளார். பாரதிக்குத் தாசனாகி உயர்ந்தவர். இவர் வங்கத்தில் பிறந்திருந்தால் அவரின் இலக்கியம் இன்று இந்தியா எங்கும் பேசப்படும். கேரளத்தில் பிறந்திருந்தால் இலக்கியப் பெருமையை உடனுக்குடன் மொழிபெயர்த்து உலக அரங்கேற்றம் ஏறியிருக்கும் உலகில் எங்கு பிறந்திருந்தாலும் அந்த நாட்டுத் தலைமைப் புலவனாய் அணிவகுத்திருப்பான். ஆனால் தமிழகத்தில் பிறந்துவிட்டால் அவன் பெருமை இன்னும் பலருக்குத் தெரியாமலேயே உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். இலக்கியப் பெருமை உலகத்தாரால் பேசப்படும்போதுதான் அதன் தகுதிப்பாடு உணரப்படும். தமிழில் உணர்ந்ததனால் அப்பெருமை என்றும் நம்மோடும் நம் உறவோடும் கலந்த நெறியாகவே உள்ளது. இதனை,

"வங்கத்திற் பிறந்திருப்பின் இலக்கியத்தை
வளர்த்துவரும் கேரளத்தில் பிறந்திருப்பின்
எங்கட்குத் தலைவனவன் மேலை நாட்டில்
எங்கேனும் பிறந்திருப்பின் அங்கு வாழ்வோர்
சிங்கத்தை நிகர்கவிஞன் புகழைப் போற்றிச்
சிறப்பனைத்தும் உலகெங்கும் செப்பிச் செப்பிப்
பொங்கித்தம் உளங்களிப்பர், தன்னே ரில்லாப்
புலவனின் தமிழ்நாட்டிற் பிறந்து விட்டான்"[15]

முடிவுரை

முடியரசன் அவர்கள் தமிழ் மொழிக்காகவும் தமிழ் இனத்திற்காகவும் எழுதிக் குவித்தக் கவிதைகள் கணக்கிட முடியாதன. தாய்மொழியாம் தமிழ்மொழி வளம் பெறவும் வாழ்வு பெறவும் அவரின் முயற்சிகள் தொடர்கதையாகியுள்ளன.

தமிழ் வெளிப்பாடு மொழியுணர்வு சமய நூல்களிலும் காப்பியங்களிலும் புராணங்களிலும் இடம்பெற்றாலும் அவற்றைத் தமிழ்மொழியாம் தாய்மொழிக்காக அரவணைத்துச் செல்லும் உயரிய பண்புமிக்க மனிதர்.

புலவர் குழுவை வரவேற்று எழுதிய கவிதைகளிலும் தமிழின் பெயரால் சங்கம் எங்கு நடைபெற்றாலும் வாழ்த்துக்கவி புனைந்து சிறப்பிக்கும் நெறியாளர். ஆதீனங்களில் சமயங்கடந்து தமிழ் உணர்வுக்கு அவர்கள் ஆற்றும் பணி, தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளிப்படுத்தும் பாங்கு, தமிழிசையை மரபார்ந்து ஒலிக்கச்

செய்து பயிற்சி தந்து தமிழிசையைக் காக்கும் உயர்ந்த எண்ணங்களையெல்லாம் பாராட்டிக் கவி எழுதியவர்.

தாய்மொழிக்கு எங்கு எப்போது களங்கம் ஏற்பட்டாலும் துடித்தெழுந்து உடனே பதிவு செய்யும் ஆற்றல் மிக்கவர். தமிழ் மறுமலர்ச்சிக்காக வழி நடத்தும் பண்பாளர். செந்தமிழ்ச்செல்வி என்ற இலக்கியத்திங்கள் இதழ் ஆற்றிய தமிழ்ப்பணியை மனதாரப்பாராட்டியவர்.தேசத்தலைவர்கள் தாய்மொழிக்கு அளித்துச் சென்ற அடையாளத்தையும் வாய்ப்பு நேருங்கால் வனப்புடன் கவியாக்கும் வரலாறாய் மலர்ந்த கவி எங்கள் முடியரசன் என்றால் மாற்றுக் கருத்து இல்லை என்பேன்.

சான்றெண் விளக்கம்

1. பாரி முடியரசன் (பதி), முடியரசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2016, ப.365.
2. மேலது, ப.365.
3. பேரா.சாலினி இளந்திரையன், தமிழ்ச் செம்மொழி ஆவணம் மணிவாசகர் பதிப்பம், சென்னை, மு.ப.2005,ப.11.
4. முடியரசன், கவிதைகள் ப.366.
5. மேலது, ப.367.
6. மேலது, ப.367.
7. கவியரசர் முடியரசன் கவிதைகள், தாய்மொழி காப்போம், ப.368.
8. மேலது, ப.369.
9. கலைஞர் மு.கருணாநிதி, செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, 2010, ப.27.
10. கவியரசர் முடியரசன் கவிதைகள், தாய்மொழி காப்போம், ப.372.
11. மேலது, ப.375.
12. மேலது, ப.379.
13. மேலது, ப.379.
14. மேலது, ப.383.
15. மேலது, ப.384.

துணைநூற்பட்டியல்

1. பாரி முடியரசன் (பதி), முடியரசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2016.
2. பேரா.சாலினி இளந்திரையன், தமிழ்ச் செம்மொழி ஆவணம் மணிவாசகர் பதிப்பம், சென்னை, மு.ப.2005.
3. கவியரசர் முடியரசன் கவிதைகள், தாய்மொழி காப்போம்.
4. கலைஞர் மு.கருணாநிதி, செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, 2010.